THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

SATURDAY, THE 22ND FEBRUARY 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—WELCOME TO NEW MINISTERS.

MR. CHAIRMAN : On behalf of the House, I extend a warm and cordial welcome to the new Ministers

II.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Fire accidents.

* 17 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons arrested in connection with the fire accidents in the City of Madras; and

(*b*) the number of previous prosecutions against them?

தீ விபத்துக்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகர தீ விபத்து சம்பந்தமாக மொத்தம் எத்தனை பேர் கைதானார்கள்?

(இ) அவர்கள் மீது ஏற்கனவே எத்தனை வழக்குகள் நடைபெற்றிருக்கின்றன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தலைவர் அவர்களே, 1967-ல் நடைபெற்ற தீ விபத்தில் 9 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். 1968-ல் நடைபெற்ற தீ விபத்தில் 6 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். 1967-ல் கைது செய்யப்பட்டவர்களில் 4 பேர் ஏற்கனவே பல வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

(இ) குற்றம் சாட்டப்பட்ட நால்வரில் எட்டி முன்பே ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கின்றான். பட்டு என்கிற பத்மநாபன் இதற்கு முன் பெண்களை இழிவாகத் தாக்கிய இரு வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கிறான். ஹரிராமன் என்பவன் சொத்து பற்றிய குற்றங்களுக்காக ஏழு முறை தண்டிக்கப்பட்டு ஒருமுறை சென்னை நகர் காவலர் சட்டத்தின் கீழ் 65-ம் பிரிவின் கீழ் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறான். கே. வேணு மதுவிலக்கு வழக்கின் கீழ் முன்னரே நாற்பது முறை தண்டிக்கப்பட்டு ஒழுங்காக நடந்து கொள்ளும்படி 106-வது பிரிவின் கீழ் இருமுறை கண்டிக்கப்பட்டுள்ளார். அவன் E-1 மயிலாப்பூர் காவல் நிலையத்தில் மிக நீண்ட குற்றப்பட்டியலை உடைய போக்கிரியும் ஆவான்.

[22nd February 1969

திரு. என். ஆர். தியாகராஜன் : இந்த வழக்குகளில் எத்தனை பேர் தண்டிக்கப்பட்டார்கள்? என்னென்ன தண்டனை அவர்களுக்குக் கிடைத்தது? இனிமேல் அப்படிப்பட்ட குற்றங்கள் நடக்காமல் இருக்க வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டனவா?

மாண்புமிகு. திரு. மு. கருணாநிதி : இந்த வழக்குகளில் யார் யார் கைதுசெய்யப்பட்டார்கள் என்பதுதான் மூலக் கேள்வியாக இருப்பதால் தண்டிக்கப்பட்ட விவரம் இதில் இல்லை. இப்படிப்பட்ட குற்றங்கள் செய்யக் கூடாது என்று கூறுவதால் மட்டும் அவர்கள் அதை செய்யாமல் விட்டுவிடுவதும் இல்லை. இது அவரவர்களுடைய மனோபாவத்தைப் பொருத்ததாகும்.

திரு. எம். எத்திராஜலு : சென்னை நகரத்தில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுவதைப் பற்றி விசாரணை செய்து சர்க்காருக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்று ஒரு பிரத்தியேக அதிகாரியை இந்த அரசு நியமித்திருக்கிறது. அவர் விசாரித்து சர்க்காருக்கு அறிக்கை சமர்ப்பித்துவிட்டாரா? அப்படியானால் அந்த அறிக்கையை மன்றத்தில் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தீ விபத்து வழக்குகள் நீதி மன்றத்தில் இருப்பதால் அந்த அறிக்கையை வெளியிடுவது உசிதமல்ல என்பதற்காகத்தான் அதை வெளியிடுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இந்தத் தீ விபத்தில் கைது செய்யப்பட்டவர்களில் பெருவாரியானவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தீயவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள்.

திரு. எம். எத்திராஜலு : இந்த பிரத்யேக அதிகாரியின் விசாரணை பற்றி தெரிந்துகொள்வதற்கு பொது மக்களும் அரசியல் கட்சியில் இருப்பவர்களும் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஆகவே இந்த வழக்கு எப்போது முடிவது, எப்போது மன்றத்திற்கு வைப்பது? சீக்கிரம் வழக்கை விசாரித்து முடிவு கூற வேண்டுமென்று சொல்லி அதற்குப் பிறகாவது அந்த அறிக்கையை மன்றத்தில் வைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வழக்குகளை விசாரித்து முடிவு சொல்வது நீதிமன்றத்தின் விவகாரம். அது முடிந்தவுடன் அந்த அறிக்கையை வைப்பது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தீ விபத்துக்களுக்குக் காரணம் 'மார்க்ஸ் காஸ்' என்ற ஒரு காஸ் என்றும், அது தானாகவே தீப்பற்றிக்கொள்கிறது என்றும் கூறப்படுகிறது. சிறிய குடிசைகளில் சாராயம் காய்ச்சிய பிறகு அந்த அடுப்புகளிலிருந்து தானாக நெருப்புப் பற்றிக் கொள்கிறது என்றும் கூறப்படுகிறது? இதில் எது உண்மை?

22nd February 1969]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரண்டையும் இந்த அறிக்கை வந்தபிறகுதான் தெரிந்துகொள்ளவேண்டும்.

The Thoughts of Mao

* 18 *Q*.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government are aware of the fact that the book entitled " The Thoughts of Mao " is being distributed in Tamil Nadu?

மாவின் சிந்தனைகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மாவின் சிந்தனைகள் என்னும் புத்தகம் தமிழகத்தில் விநியோகிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாவட்டங்களில் இச்சிறு நூல் வழங்கப்பட்டு வருவது பற்றி அரசாங்கத்துக்குத் தகவல் எதும் இல்லை. ஆனால் "மவோவின் சிந்தனைகள்" என்னும் சிறு நூலின் சுமார் 25 படிகள் சென்னை மாநகரத்தில் வழங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, மாவோவும் அவருடைய நாடும் நம் நாட்டுக்கு எதிராகவே இருந்துவருபவை. அத்துடன் நம்மீது யுத்தம் வேறு தொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையை வெளியிடுவது பற்றி என்ன நடவடிக்கை இந்த அரசாங்கம் எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் வெளி நாட்டினுடைய புத்தகங்கள் அல்லது அதில் கூறுகிற கருத்துக்களை யெடுத்து வெளியிடுவதற்கு உரிமை யிருக்கிறது, அனுமதியிருக்கிறது. அவ்விதம் வெளியிடும் நூல் இந்த நாட்டினுடைய பாதுகாப்பிற்கு, ஒற்றுமைக்கு பாதகம் விளைவிக்கக் கூடியதாக இருந்தால், அப்படிப்பட்ட புத்தகங்களை இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட எந்த வெளியீடும் மாநிலத்தின் பாதுகாப்புக்கோ ஒற்றுமைக்கோ பாதகம் விளைவிப்பதாக இருந்தால், இந்திய பீனல் கோடு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட இந்த 'மாவோவின் சிந்தனைகள்' என்ற புத்தகம் என் கைவசம் இருக்கிறது. அது முழுவதையும் நான் படித்துப் பார்த்த வகையில், அதில் இந்தியாவின் ஒற்றுமைக்கு பாதகம் விளைவிக்கும் வகையில் எதுவும் இல்லை. அது முழுவதிலும் அவர்களுடைய கட்சியை எப்படி நடத்தவேண்டும், எப்படிச் செயல்முறை அமைய வேண்டுமென்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.